# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2049 ● ஏப்ரல் 14, 2018 Weekly E-paper ● April 14, 2018


## பயந்து ‘பறந்த’ மோடி





● சுப.வீரபாண்டியன்







காவிரி நீர்ச் சிக்கலில் தமிழகமே கொதித்துக் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. கடந்த பல ஆண்டுகளாக நடைபெற்று வந்த வழக்கில், தன் இறுதித் தீர்ப்பை இந்திய உச்ச நீதி மன்றம், 16.02.2018 அன்று வழங்கியது. தமிழகத்திற்கு 192 டி.எம்.சி தண்ணீருக்குப் பதிலாக, 177.25 டி.எம்.சி தண்ணீர் வழங்கினால் போதும் என்பதும், அதனை ஒழுங்குபடுத்த ஆறு வார காலத்திற்குள் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கப்பட வேண்டும் என்பதும் அத்தீர்ப்பின் சாரம்.

ஆனால் ஆறு வாரங்கள் கழியும்வரை அமைதியாக இருந்த மத்திய அரசு, கடந்த 30 ஆம் தேதி உச்ச நீதி மன்றத்தை அணுகி, ஸ்கீம் என்றால் என்ன என்று கேட்டுள்ளதோடு, கர்நாடகத் தேர்தலை ஒட்டி, அந்த வாரியம் அமைக்க மூன்று மாத கால அவகாசமும் கேட்டுள்ளது. இது தமிழ்நாட்டிற்கு மத்திய அரசு செய்துள்ள பச்சைத் துரோகம் ஆகும்.

இதனை எதிர்த்து, கடந்த 12 ஆம் தேதி பிரதமர் மோடி சென்னை வந்தபோது தமிழகமே அவருக்குக் கறுப்புக் கொடி காட்டியது. அதனை எதிர்கொள்ள அஞ்சிய பிரதமர், தரையில் கால் வைக்காமல், வானிலே ஹெலிகாப்டரில் பறந்தார், பயந்து ஓடினார் என்று சொல்லக் கேட்டுள்ளோம். முதன் முதலில் பயந்து பறந்த பிரதமரைத் தமிழகம் கண்டது.

காவிரி நீர் வந்து சேரும் வரை தமிழகம் ஓயாது என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொல்ல வேண்டிய நேரம் இது! தமிழக மக்களே ஒன்றிணைவோம், போராடுவோம்!!




Tweet

SubaVeerapandian
@Suba_Vee

இன்று தமிழகம் முழுவதும் பறந்த கொடிகளின் கறுப்பு நிறம், சாலைகளில் தெரிந்தது, உடைகளில் தெரிந்தது, மேலே பறந்த பலூன்களில் தெரிந்தது - கவனித்துப் பார்த்த போது, பிரதமர் #மோடி யின் முகத்திலும் தெரிந்தது. #BJP #DMK

9:40 PM · 12 Apr 18

View Tweet activity

316 Retweets 1,186 Likes

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

# வீரவணக்கம்



**தி.**மு.கழக முன்னாள் மேயர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், கொள்கைப் பற்றாளர், சிறந்த பண்பாளர் சா.கணேசன் அவர்கள். 2007 ஜூன் மாதம் நம் கருஞ்சட்டைத் தமிழர் அலுவலகத்தை திறந்து வைத்தவர் அவர். அன்னாரின் மறைவுக்கு நம் இரங்கலும், வீரவணக்கமும்!

# அம்பேத்கர் பிறந்தநாள்

**அம்**பேத்கர் பிறந்த நாளையொட்டி சென்னை அம்பத்தூர் ஒரகடத்தில் அமைந்துள்ள அம்பேத்கர் சிலைக்கு, பேராசிரியர் சுப.வீரபாண்டியன் மாலை அணிவித்தார். உடன் இருப்பவர்கள் அம்பத்தூர் ராஜி, ராமகிருஷ்ணன், மோகன்ராம், தேவேந்திரன் மற்றும் நம் இயக்கத் தோழர்கள்.



# அம்பேத்கர் பிறந்தநாள்




**ஏ**ப்ரல் 13 2018ஆம் நாள் புத்தகரத்தில் நடைபெற்ற அம்பேத்கர் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டத்தில், புரட்சியாளர் அம்பேத்கருக்கு மாலையிட்டு மரியாதை செலுத்தி, உரையாற்றினார் சுப.வீரபாண்டியன். உடன் அம்பத்தூர் ராஜி, மோகன்ராம், ராமகிருஷ்ணன், செந்தில் குமார் மற்றும் தோழர்கள்.

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## ஆசிஃபா! ஆசிஃபா!

**இது** என்ன நாடா? இல்லை சுடுகாடா? சுடுகாட்டில் கிடைக்கும் அமைதி கூட இந்த நாட்டில் இல்லை.

காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை எந்த மாநிலத்திலும் மக்கள் அமைதியாக இல்லை. குறிப்பாகப் பெண்களும், குழந்தைகளும்.

காஷ்மீர் மாநிலம். கதுவா மாவட்டம். ராசானா எனும் சிற்றூர். இந்தச் சிற்றூரில்தான் 8 வயது ஆசிஃபா என்ற குழந்தையைப் பாலியல் வன்கொடுமை செய்து வீசியிருக்கிறார்கள் சமூகத் துரோகிகள்.

ஆசிஃபாவைக் கடத்தி ஒரு கோயிலில் அடைத்து வைத்துக் கதறக் கதறக் வன்புணர்வு செய்துள்ளனர் அந்தக் கயவர்கள்.

ஏன்? அவள் ஒரு இஸ்லாமியப் பெண் என்பதாலா! அதுவும், காவல் நிலையத்தில் கூட கிடைக்காத ஒரு மகத்தான பாதுகாப்பு, கோயில் கருவறையில் கிடைக்கும் என்பதால்தான் கோயிலில் செய்துள்ளார்கள் இந்தக் கொடுமையை.

இது ஒரு சிறு பிரச்னையாம். வெளிநாட்டுச் சுற்றுலா வருமானம் போய்விடுமாம். இதைப் பெரிது படுத்தக்கூடாதாம், சொல்கிறார் மத்திய அமைச்சர் அருண் ஜெட்லி.

ஆசிஃபா வன்கொடுமை மற்றும் கொலைக்கு ஆதரவாக அங்கே செய்யப்படும் இந்து அமைப்புகளின் போராட்டங்களும், அம்மாநிலத்தின் முதல்வர் மெஹ்பூபா தலைமையிலான பா.ஜ.க. கூட்டணி ஆட்சியின் சந்திரபிரகாஷ் கங்கா - லால்சிங் ஆகிய இரு அமைச்சர்களும் பின்னணியில் இருக்கிறார்கள்.

இது போதாது என்று உத்தர பிரதேசம், உன்னா மாவட்டம் பங்கர்மாவ் தொகுதி பா.ஜ.க. சட்ட மன்ற உறுப்பினர் குல்தீப் சிங்கும், அவரின் சகோதரரும் நீதிமன்ற உத்தரவால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். என்ன காரணம்?

17 வயது இளம் பெண்ணை இந்த குல்தீப் சிங் சகோதரர்கள் பாலியல் வன்கொடுமை செய்து, அதை வெளியே சென்ன குற்றத்திற்காக அவரின் தந்தையைக் காவல் நிலையத்தில் வைத்து கொலை செய்துவிட்டார்கள்.

முதலில் பாலியல் வன்கொடுமை, அடுத்தது கொலை. இதுதான் இந்த நாட்டின் இந்துக் கலாச்சரமா!

காஷ்மீரிலும், உத்தர பிரதேசத்திலும் நிகழ்ந்துள்ள பாலியல் இரு கொலைகளுக்கும் பின்னால் பா.ஜ.க. இருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

தவறு செய்பவர்கள் தப்பிக்க முடியாது என்று சொல்ல ஒரு பிரதமர் தேவையில்லை. தவறு செய்தவர்கள் தண்டிக்கபட்டே ஆக வேண்டும்.

குழந்தை ஆசிஃபாவின் அலறல் சத்தம்... கதறும் குரல்... துடிக்கும் அந்த பிஞ்சு உடல்... அது என்ன கோயிலா, காமக்கூடமா?

நீதி கிடைக்க வேண்டும், நீதி கிடைக்க வேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டே ஆக வேண்டும். தப்பி விடக்கூடாது அந்த காமவெறிபிடித்த கயவர் கூட்டம்.

ஆசிஃபா! மகளே, இந்த நாடு உன்னிடம் மன்னிப்பு கேட்கிறது.





## துணை வேந்தர் நியமனம்

## ஆளுநர் கண்கட்டி வித்தை

● உதயகுமார்




தமிழ்நாடு நுண்கலைப் பல்கலைக்கழகத்திற்குத் துணைவேந்தராக கேரளப் பார்ப்பனர், அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்திற்குத் துணைவேந்தராக ஆந்திரப் பார்ப்பனர், இந்த வரிசையில் இப்போது, 500 க்கும் மேற்பட்ட கல்லூரிகளைக் கொண்ட அண்ணா பல்கலைக்கழகத்திற்குத் துணைவேந்தராகக் கர்நாடக மாநிலத்தவர். புதிய கல்விக் கொள்கை, நீட், நவோதயா பள்ளிகள் என நான்கு ஆண்டுகளில் கல்விக் கொள்கைகளை காவிக் கொள்கைகளாக மாற்றியமைக்கும் மத்திய அரசு, தமிழ்நாட்டைக் குறிவைத்து வேகவேகமாகக் காவி மயமாக்கும் முயற்சிகளில் இறங்கியிருக்கிறது.

தமிழர்களெல்லாம் ஒன்றுபட்டு உரிமைகளுக்காகப் போராடும் இவ்வேளையில் குறிப்பாகக் காவிரிக்காகத் தமிழ்நாடெங்கும் போராட்டங்கள் எழுச்சியோடு நடைபெற்றுக்கொண்டிருக்க, கல்வியில் கைவைத்திருக்கிறது மத்திய அரசு. அதிலும் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த ஒருவரைத் துணைவேந்தராக நியமனம் செய்து தமிழர்களை அவமானப்படுத்தியிருக்கிறது. அதோடு, உயர்கல்வியில் தமிழர்கள் அடைந்திருக்கும் முன்னேற்றத்தைச் சீர்குலைக்கும் போக்காக இந்தி / சமஸ்கிருதத் திணிப்பு, வேத விஞ் ஞானம் என தொழில்நுட்பக் கல்விக்கும் காவி நிறம் பூசுகிறது.

தகுதி வாய்ந்த ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த புஷ்பவனம் குப்புசாமி ஒதுக்கப்பட்டார். தமிழ் இசைக்காக அரும்பணியாற்றிய அவருக்கு இடமில்லை. ஹரிகதா நிகழ்த்திய ப்ரமிளா குருமூர்த்தி இப்போது துணைவேந்தர்.

சூரியநாராயண சாஸ்த்திரி பரிதிமாற்கலைஞராக மாறிய வரலாறு கொண்ட தமிழ்நாட்டில், தமிழை வழக்காடு மொழியாக ஆக்க கோரிக்கை வலுக்கும் இந்நேரத்தில் சட்டப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக ஆர்.எஸ்.எஸ் காரரான சூரியநாராயண சாஸ்திரி.

முனைவர் வா.செ.குழந்தைசாமி, முனைவர் அனந்த கிருஷ்ணன் போன்ற மிகச் சிறந்த அறிஞர்கள் துணைவேந்தர்களாக வலம் வந்த அண்ணா பல்கலைக் கழகத்தில் இன்று கர்நாடகாவைச் சேர்ந்த சூரப்பா.

தேடல் குழுவில் (Search Committee) பிற மாநிலத்தவர்கள், துணை வேந்தர் நியமனத்தில் இது வரை நடந்திராத புதிய நடைமுறைகள். இதுதான் ஆளுநர் பன்வாரிலால் புரோகித்தின் கண்கட்டி வித்தைகள்.


டெல்லி போன்ற இடங்களில் உள்ள உயர் கல்வி நிலையங்களில் தமிழ் மாணவர்கள் சிலர் மர்மமான முறையில் இறந்து போகிறார்கள். சிலர்உயிர் பயத்தோடு தங்கள் கல்வியைத் தொடர்கிறார்கள். ஆனால் இங்கு துணைவேந்தராகவே மற்ற மாநிலத்தவர் நியமனம் செய்யப்படுகின்றனர்.

தொடரும் உரிமைப் பறிப்பையும்
படரும் காவிக் கலப்பையும்
கருப்பே வெல்லும்!


## ஆட்டக்களத்தை வீழ்த்திய போராட்டக்களம்!

தமிழர்களெல்லாம் ஓரே குரலில் உரிமைகளுக்காகப் போராடி வரும் நிலையில், அதை திசைதிருப்ப IPL மூலம் முயற்சி நடந்தது. ஆனால் அம்முயற்சி தோல்வியடைந்ததோடு மட்டுமல்லாமல் உரிமைக்குரலையும் ஓங்கி ஒலிக்கச் செய்திருக்கிறது. ஏப்ரல் 10ஆம் தேதி சேப்பாக்கம் ஆடுகளத்தில் சென்னை அணிக்கும் கொல்கத்தா அணிக்கும் இடையே ஆட்டம் நடந்திருக்கலாம். ஆனால் உலகம் உற்று நோக்கியது உரிமைக்காகப் போராட்டம் நடத்திய தமிழர்களைத்தான். ஆதிக்கவாதிகள் வீசிய பந்தை நீதிக்காகப் போராடும் தமிழர்கள் விளாசியதில், பந்து சென்னையில் இருந்து புனேவுக்குப் பறந்துவிட்டது. இதுவே IPL வரலாற்றில் மிகப் பெரிய சிக்சர்!

- உதயகுமார்




## தமிழா! சித்திரையல்ல உன் தமிழ்ப்புத்தாண்டு



நித்திரையில் இருக்கும் தமிழா
சித்திரையல்ல உனக்குத்தமிழ்ப் புத்தாண்டு!
அண்டிப் பிழைக்க வந்த
ஆரியக் கூட்டம் காட்டியதே
அறிவுக்கு ஒவ்வாத அறுபதாண்டு!
தரணி யாண்ட தமிழருக்கு
தைமுதல் நாளேதமிழ்ப் புத்தாண்டு!

## வடக்கு பறிக்கிறது, தெற்கு பறிகொடுக்கிறது!

வருவாய் தரும் தென்மாநிலங்களை மீண்டும் சுரண்ட வழிவகை செய்து கொடுத்திருக்கிறது 15 ஆவது நிதிக்குழு. 1971ஆம் ஆண்டு மக்கள் தொகையைக் கணக்கில் கொள்ளாமல், 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகையைக் கணக்கில் கொண்டு மாநிலங்களுக்கிடையேயான நிதிப் பகிர்வைத் தீர்மானித்திருக்கிறது 15 ஆவது நிதிக்குழு. மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதில் முன்னோடி மாநிலமாகத் தமிழ் நாடு திகழ்கிறது என்பதை 2001ஆம் ஆண்டு வாஜ்பாய் அரசின் மத்திய திட்டக்குழு வெளியிட்ட National Human Development Report, 2001 தேசிய மனித வளர்ச்சி அறிக்கை, "தமிழ்நாட்டில் இராமசாமி பெரியார் போன்ற தலைவர்களால் ஏற்படுத்தப்பட்ட சமூகச் சீர்திருத்தங்களால் மக்கள் பொறுப்புள்ள பெற்றோர்களாகவும், குடும்பக்கட்டுப்பாட்டை எளிமையாக ஏற்றுக்கொள்பவர்களாகவும் மாற்றம் அடைந்திருக்கிறார்கள்" என்று குறிப்பிட்டிருக்கிறது. தந்தை பெரியாரால் நாங்கள் அடைந்த முன்னேற்றத்தை நீங்கள் அறுவடை செய்ய முயற்சிக்கிறீர்கள். எங்கள் கொள்கைகளை எடுத்துக்கொள்ளுங்கள். எங்களைக் கொள்ளையடித்து கெடுக்காதீர்கள்.

- உதயகுமார்

# நியூட்ரினோ ஆய்வு மையம்

## சட்டவிரோதமானது ஏன்?

வெற்றிச்செல்வன்



சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை 2006ன் கீழ் (Environmental Impact Assessment [EIA]), பிரிவு A மற்றும் பிரிவு B என இருவகையான திட்டங்களுக்கு அனுமதி தரப்படுகிறது.

நியூட்ரினோ மையம் அமையவுள்ள இடம், கேரளாவின் இடுக்கி மாவட்டத்தின் மதிகெட்டான் சோலை தேசியப் பூங்காவிலிருந்து வெறும் 4.9 கி.மீ தொலைவில் உள்ளது உள்ளிட்ட பல்வேறு காரணங்களின் அடிப்படையில், இத்திட்டம் பிரிவு A-ன் கீழ் கொண்டுவரப்படவேண்டும்.

2006 (EIA) அறிவிப்புப்படி பிரிவின் கீழ் வரும் திட்டங்களுக்கு, நடுவணரசின் சுற்றுச்சூழல் அமைச்சகத்திடமிருந்து முன்அனுமதி (prior environmental cleareance) பெறப்பட வேண்டும்.

ஆனால் இத்திட்டத்திற்கு வெறும் "கட்டுமானப்பணி" மேற்கொள்ளப்படுவது போன்ற திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்படும் பிரிவு Bன் கீழ் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதற்கான காரணமாக இத்திட்டத்தை "சிறப்புத் திட்டம்" என்று அமைச்சகம் வரையறை செய்துள்ளது.

எந்தவொரு பிரிவின்கீழ் இத்திட்டம் கொண்டுவரப்பட்டதால், தேசிய பசுமைத் தீர்ப்பாயம் இதற்கான சுற்றுச்சூழல் அனுமதியை ரத்து செய்ததோ அதே பிரிவின்கீழ் இத்திட்டத்திற்கு அமைச்சகத்தால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இது தேசிய பசுமைத் தீர்ப்பாயம் போன்ற சட்ட அங்கீகாரம் பெற்ற அமைப்புகளின் அதிகாரத்தைக் கேள்விக்குள்ளாக்குவது. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிப்பிற்கு (EIA, 2006) முரணானது. ●

---

# டாக்டர் அம்பேத்கர் 127ஆம் பிறந்தநாள்

எழில்.இளங்கோவன்

1891 ஏப்ரல் 14 அன்று மத்திய பிரதேச மாநிலத்தின், போருக்கான இராணுவத் தலைமையகம் உள்ள மாவ் என்ற ஊரில் தாயார் பீமாபாய், தந்தை சுபேதா மேஜர் ராம்ஜீ சக்பால் ஆகியோரின் 14ஆம் மகனாகப் பிறந்தார் அம்பேத்கர்.

ஈடு இணையற்ற சிந்தனையாளர், அறிஞர், சமூக நீதிப் போராளி, பவுத்தத்தை ஏற்றுக்கொண்ட பகுத்தறிவாளர் அவர்.

அவரின் புகழை அழிப்பதற்கென்றே, இன்று பா.ஜ.க., இந்து பரிவாரங்கள் அவரைச் சொந்தம் கொண்டாடத் தொடங்கியுள்ளனர்.

உத்தர பிரதேசத்தில் காவி வண்ணம் பூசுகிறார்கள் அம்பேத்கருக்கு. பிரதமர் மோடியோ விழுந்துவிழுந்து உருகுகிறார் அம்பேத்கர் பெயரைச் சொல்லி.



அவரை இந்துவாகக் காட்டும் நாடகம் இது.

ஆனால் அவரோ சாகும் போது கூட இந்துவாகச் சாகாமல், பவுத்தராகவே மறைந்தார்.

இந்து மதத்தைக் கடைசி வரை எதிர்க்க வேண்டும் என்பதே அவரின் நோக்கம்.

1956இல் அக்டோபர் 14ஆம் நாள் அம்பேத்கர் இந்து மதத்தை விட்டு வெளியேறினார்.

அன்று காலை 9.30 மணிக்கு குசிநாராவில் இருந்து வந்த துறவி பிக்கு மாகாஸ்தவிர் சந்திரமணி முன்னிலையில், இந்துத்துவத்திற்கு எதிராக 22 உறுதி மொழிகளைச் சொல்லி பவுத்தத்தை ஏற்றுக்கொண்டார் நாகபுரியில்.

அப்போது அவருடன் பவுத்தம் ஏற்ற மக்கள் தொகையினர் ஏறத்தாழ 5 லட்சம் பேர்.

1956 டிசம்பர் 6ஆம் நாள் டெல்லி அலிப்பூர் சாலையில் உள்ள அவரது வீட்டில், உறங்கும் போது மரணத்தைத் தழுவினார் டாக்டர் அம்பேத்கர்.

அம்பேத்கரை நெஞ்சில் ஏந்துவோம்! அவரின் வழி நடப்போம். ●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.